**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு**
**எப்படிப் படிப்பது?**

---

மிகப் பழைய காலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தில் நிகழ்ந்த சம்பவம் இது. **வர்த்தமான் - சுமன்** என்ற இரு மாணவர்கள் ஒரு சிறந்த குருவிடம் படித்து வருகிறார்கள். இருவரும் மிக நெருங்கிய தோழர்கள். சதா படிப்பு, வேலை, குரு சேவை என அவர்கள் குருகுல வாசம் சென்றது.

இவர்களின் அறிவையும் அயராத உழைப்பையும் கண்டு மகிழ்ந்த குரு பல உயர்ந்த சாஸ்த்ரங்களையும் தனியாகக் கற்றுத்தந்து அருளினார்.

**தன் மாணவர்களை அவர் 4 விதமாகப் பிரித்தார்.**

* **<u>தைல புத்தி உள்ளவர்கள்</u>**: எண்ணெய்யைத் தண்ணீர் மீது ஊற்றினால் என்ன ஆகும்? அது தண்ணீர் முழுக்க பரவும். அது போல் ஆசிரியர் கற்றுக் கொடுப்பதை மனதில் விழிப்புணர்வுடன் பரவவிட்டு, உலகம் முழுதும் தான் பெற்ற அறிவை மக்களுக்கும் எடுத்துக் கூறிப் பரப்பி சேவை செய்வது உயர்ந்த மாணவரின் குணம்.

* **<u>நெய் புத்தி உள்ளவர்கள்</u>**: நெய்யைத் தண்ணீரில் போட்டால் அப்படியே உள்ளே போய் அமிழும். அது போல் ஆசியர் தந்த அறிவை அப்படியே உள்வாங்கிக் கொண்டு அதை மற்றவர்களுக்குப் பயன்படுத்தாமல் இருக்கும் குணம் இதுவாகும்.

* **<u>கம்பள [carpet] புத்தி உள்ளவர்கள்</u>**: கம்பளத்தின் மீது எதைப் போட்டாலும் ஒரு உதறு உதறினால் எல்லாமே உதிரும். அது போல் ஆசிரியர் எதை எப்படி விளக்கினாலும் அதை அப்படியே மனதில் பதிக்காமல் வகுப்பு முடிந்தவுடன் மறக்கும் குணம் இதுவாகும்.

* **<u>களிமண் புத்தி உள்ளவர்கள்</u>**: ஒன்றுமே புரிந்து கொள்ள முடியாத குணம்.

இவற்றுள் வர்த்தமானும் சுமனும் எண்ணெய் புத்தியுடன் படித்தனர். குருகுல வாசம் முடிவுற்றது. ஆசிரியர் முறைப்படி இவர்களை ஆசீர்வதித்து வழியனுப்பினார். இருவரும் சேர்ந்தே ஒரு பள்ளிக்கூடம் நடத்துவது என்ற முடிவுக்கு வந்தனர்.

ஊர் சேர்ந்த அவர்கள் தாங்கள் கற்ற கல்வியை சோதித்துப் பார்த்துத் தங்கள் திறமையையும் உணர்ந்து தெளிய ஆசைப் பட்டனர். அதன் படி இருவரும்

அக்னிக்கு உரிய வேத மந்த்ரங்களைச் சொல்ல முடிவு செய்தனர்.

**முறைப்படி அவற்றைச் சொல்லும் போது அக்னியின் சக்தியால் ஹோம குண்டத்தில் இயற்கையாகவே அக்னி உண்டாக வேண்டும். அதுவே அம்மந்த்ரத்தை மிகவும் perfection ஆகக் கற்றதன் அடையாளம் ஆகும்.**

சுமன் அக்னி மந்த்ரம் சொல்லச் சொல்ல அவன் குண்டத்தில் புகை மட்டுமே உண்டானது, அது தீயாக மாறவே இல்லை. ஆனால் வர்த்தமான் சொல்லச் சொல்ல அக்னி கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தவுடன் சுமன் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான், அதே நேரம் தன் மந்த்ரம் perfect ஆக இல்லாததற்கு வருந்தினான்.

அப்போது வர்த்தமான் கூறினான், ***"சுமன்! இருவரும் ஒரே ஆசிரியர் இடத்தில் ஒரே காலத்தில் ஒரே ஸ்ரத்தையுடன் ஒரே மாதிரியான சாஸ்த்ரங்களைக் கற்றோம். ஆனால் ஒரு வித்யாசம் இருவருக்கும் இருந்ததை அவர் எடுத்துக் கூறியது உனக்கு நினைவில் இல்லையா?***

***எதையுமே நான் awareness உடன் கற்றேன், அனைத்தையும் எனக்குள் relate செய்து கொண்டு முழுமையான அறிவைத் தேடி என் உள்ளுள் உணர்ந்தேன். ஆனால் நீ வெறும் மனப்படம் மட்டும் செய்தாய், பொருள் தெரிந்தும் அதன் உள்ளே சென்று self-exploration செய்து கொள்ளவில்லை.***

***தீயை உண்டாக்கும் தீப்பெட்டிக் குச்சியில் மருந்து இருந்தால் தானே தீ உண்டாகும்? அதைப் போல முதலில் நாம் படிக்கும் எந்த ஒரு concept உம் நமக்குள் இருப்பதையே உணர்த்தல் மிக மிக அவசியம். இதோ அக்னி மந்த்ரத்தால் எரியும் தீ முதலில் எனக்குள் மூண்டு எழுந்ததால் தான் அது மந்த்ர சக்தியின் பலனாக ஹோம குண்டத்திலும் வந்தது. இப்போது புரிகிறாதா உன் மந்த்ரம் ஏன் வெறும் புகையைத் தான் உண்டாக்கியது என்று?"*** என விளக்கினான்.

அது முதல் சுமனும் மிக்க awareness கொண்டு தான் கற்றவற்றைப் ப்ரயோகித்து பலன் கண்டான்.இருவரும் மிகச் சிறந்த பள்ளி ஒன்றை உருவாக்கிக் கல்வி சேவை புரிந்தனர்.